SNS academy
a fingerprint school
*Sincerity, Nobility and Service*

பெயர் : **PERIODIC TEST- 2 - 2022** மதிப்பெண்கள் : 40

வகுப்பு : 7 தேதி : 26.8.22 கால அளவு : 1 ½ மணி நேரம்

I. **பின்வரும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி:** (5)

பாண்டியர்கள் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திலிருந்தே வாழ்ந்து வந்த தமிழ்ப் பழங்குடி மன்னர்கள் என்று திருக்குறள் உரையாசிரியர் பரிமேலழகர் கூறியுள்ளர். ஆதி இதிகாசங்களான வடமொழி இராமாயணத்திலும் பாரதத்திலும் பாண்டியரைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இலங்கையின் பண்டைய வரலாற்றைக் கூறும் 'மகாவமிசம்' என்னும் நூல் கி.மு.478இல் இலங்கையை ஆண்ட தமிழ் வேந்தனான விசயன், ஒரு பாண்டிய மன்னன் மகளை மணந்ததாகக் கூறுகிறது. தமிழகத்தின் தென்பகுதியை ஆண்ட பாண்டியர்கள் மாற்றாரும் போற்றும் வண்ணம் ஆண்டனர்.

**வினாக்கள்**

i. திருக்குறளுக்கு உரையெழுதியவர்
அ) பாண்டியர் ஆ) பரிமேலழகர் இ) விசயன் ஈ) இளங்கோவடிகள்

ii. ஆதி இதிகாசங்கள்
அ) சிலப்பதிகாரம், மணிமேகலை ஆ) இராமாயணம், மகாபாரதம்
இ) இராமாயணம், மணிமேகலை ஈ) இராமாயணம், சிலப்பதிகாரம்

iii. இலங்கையை ஆண்ட தமிழ் மன்னன்
அ) நெடுஞ்செழியன் ஆ) கடுங்கோன் இ) விசயன் ஈ) பரிமேலழகர்

iv. பாண்டியர்கள் சிறப்புற ஆண்டது தமிழகத்தின்
அ) தென்பகுதி ஆ) வடபகுதி இ) கிழக்குப்பகுதி ஈ) மேற்குப்பகுதி

v. மன்னன் என்பதன் பொருள்
அ) மைந்தன் ஆ) களப்பிரர் இ) பாண்டியன் ஈ) வேந்தன்

## இலக்கணம்

**II. சரியான விடையினைத் தேர்ந்தெடுக்க:** (10)

**1.ஒவ்வோர் எழுத்தை ஒலிப்பதற்கு ஆகும் கால அளவு _________ என்பர்.**

அ. நிமிடம் ஆ. நேரம் இ. மாத்திரை ஈ. விநாடி

**2. ஐ – தனித்து ஒலிக்கும் போது _______ மாத்திரை அளவு பெறுகிறது**

அ. 2 ஆ. 3 இ. 1 ஈ. 1/2

**3. ஐகாரம் சொல்லின் இடையிலும் இறுதியிலும் வரும் போது _________ மாத்திரை அளவு பெறுகிறது.**

அ. 2 ஆ. 1 இ. 1 1/2 ஈ. 1/2

**4. சொல்லின் இடையிலும் இறுதியிலும் வராத குறுக்கம்_________**

அ. ஐகாரம் ஆ. ஔகாரம் இ. மகரம் ஈ. ஆய்தம்

**5 . முள் + தீது எவ்வாறு வரும்?**

அ. முதீது ஆ. முள்தீது இ. முஃடீது ஈ. முஃள்தீது

**6. வேட்கை என்னும் சொல்லில் ஐகாரக் குறுக்கம் பெறும் மாத்திரை அளவு_______**

அ. அரை ஆ. ஒன்று இ. ஒன்றரை ஈ. இரண்டு

**7. மகரக்குறுக்கம் இடம்பெறாத சொல்_________**

அ. போன்ம் ஆ. மருண்ம் இ. பழம் விழுந்தது ஈ. பணம் கிடைத்தது

**8. சொல்லின் முதலில் மட்டுமே இடம் பெறுவது_________**

அ. ஐகாரக் குறுக்கம் ஆ. ஔகாரக் குறுக்கம்

இ. மகரக்குறுக்கம் ஈ. ஆய்தக் குறுக்கம்

**9. எஃகு – இச்சொல்லில் குறுக்கத்தின் மாத்திரை அளவு_________**

அ. 1 ஆ. 2 இ. 1/2 ஈ. 3

**10. அம்மா இச்சொல்லில் மகர மெய்யெழுத்து பெறும் மாத்திரை அளவு_________**

அ. 1 ஆ. 2 இ. 1/2 ஈ. 3

**III. பின்வரும் குறுவினாவிற்கு விடையளி:** (6)

1. நாவல் மரம் எத்தனை தலைமுறைகளாக அங்கு நின்றிருந்தது?
2. மானின் வகைகள் சிலவற்றின் பெயர்களை எழுதுக.
3. வாழும் நெறி யாது?

**IV. பின்வரும் சிறுவினாவிற்கு விடையளி** **(9)**

1. காடுகளை அழிப்பதால் ஏற்படும் விளைவுகளைப் பட்டியலிடுக.
2. காடு பாடலில் விலங்குகளின் செயல்களாகக் கவிஞர் கூறுவன யாவை?
3. நாவல் மரம் பற்றிய நினைவுகளாகக் கவிஞர் கூறுவன யாவை?

**V. பின்வரும் துணைப்பாட வினாவிற்கு விடையளி:** (7)

1. ஜாதவ்பயேங் காட்டை எவ்வாறு உருவாக்கினார்?

**VI. விடுபட்ட திருக்குறள் சீர்களை எழுதுக:** (3)

வாய்மை ________ யாதெனின் ___________

தீமை இலாத ________ .